Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Imapact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p365–375 TIRJTS-2026-0024
DOI: 10.63300/tmi12n062026.16

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

இலங்கை மலையகத்தில் கல்வி – தோற்றமும் வளர்ச்சியும்

Education in the Hill Country of Sri Lanka – Origins and Development

வி.பூமா[1,*], முனைவர் ஞா.பழனிவேலு[2],

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

[2] இணைப்பேராசிரியர் & நெறியாளர் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***Corresponding author:** வி.பூமா, drrajasekaran2020@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 15 October 2026
Revised: 20 October 2026
Accepted: 25 October 2026

Article ID
TIRJTS-2026-0024

Peer review
Double-blind peer review

Keywords
Sri Lankan Hill Country
Educational Development
Colonial Education
Plantation Schools
Free Education
National Education Policy
Educational Reforms.

ABSTRACT

The Central Highland regions of Sri Lanka occupy a distinctive place in the country's history, economy, and social structure. Following the establishment of tea plantations during British colonial rule in the nineteenth century, a large number of Tamil laborers were brought from India, particularly from Tamil Nadu. This migration not only created a new social structure in the Central Highlands but also brought about a distinctive transformation in the development of education. During the early period, the education of the Hill Country Tamil community was largely controlled by missionary organizations and plantation management. Subsequently, education gradually developed through government education policies, the introduction of free education, national educational reforms, and the contributions of social organizations.

This article provides an academic examination of the origins, development, and historical evolution of education in the Central Highlands of Sri Lanka. It analyses in detail the impact of colonial education, educational transformations after independence, the development of plantation schools, government education policies, and educational advancements since the year 2000. Furthermore, it examines the structural, economic, and social challenges that continue to affect educational development in the Hill Country.

This study is based on a documentary research methodology, employing historical and descriptive approaches. Data have been collected from government education reports, educational policy documents, doctoral dissertations, books, academic journals, and reports published by international organizations. This research contributes to understanding the historical trajectory of educational development in the Sri Lankan Central Highlands and provides useful recommendations for future educational planning.

© 2026 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS DOI: 10.63300/tmi12n062026.16

How to cite this article: வி.பூமா, & முனைவர் ஞா.பழனிவேலு, இணைப்பேராசிரியர் & நெறியாளர் (2026). இலங்கை மலையகத்தில் கல்வி – தோற்றமும் வளர்ச்சியும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 365–375. https://doi.org/10.63300/tmi12n062026.16
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

1.அறிமுகம்

கல்வி என்பது ஒரு சமூகத்தின் அறிவுசார், பொருளாதார மற்றும் பண்பாட்டு முன்னேற்றத்திற்கான அடிப்படை சக்தியாகக் கருதப்படுகிறது. தனிநபரின் அறிவுத்திறன், சிந்தனைத்திறன், சமூகப் பொறுப்புணர்வு மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்தை உருவாக்குவதில் கல்வி முக்கிய பங்காற்றுகிறது. ஒரு நாட்டின் நிலையான வளர்ச்சியும் அதன் கல்வி அமைப்பின் தரத்தையும், கல்வி அனைவருக்கும் சமமாகக் கிடைக்கும் வாய்ப்புகளையும் சார்ந்தே அமைகிறது.

இலங்கையில் கல்வி வளர்ச்சி பல வரலாற்று கட்டங்களை கடந்து முன்னேறியுள்ளது. பாரம்பரியக் கல்வி முறையிலிருந்து காலனித்துவக்கல்வி, பின்னர் தேசியக்கல்வி மற்றும் இலவசக்கல்விமுறை என பல்வேறு மாற்றங்கள் கல்வித்துறையில் நிகழ்ந்துள்ளன. இம்மாற்றங்கள் நாட்டின் அனைத்து சமூகங்களையும் ஒரே அளவில் சென்றடையவில்லை. குறிப்பாக மலையகத் தமிழர் சமூகத்தின் கல்வி வளர்ச்சி, நாட்டின் பொதுக்கல்வி வளர்ச்சியிலிருந்து வேறுபட்ட தனித்துவமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது.

19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கிய போது இந்தியாவின் தென்பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழகத் தொழிலாளர்கள் மலையகத்திற்கு அழைத்து வரப்பட்டனர். ஆரம்பத்தில் இக்குடியேற்றத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மட்டுமே முக்கியமாகக் கருதப்பட்டதால், கல்விக்கு போதிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி வசதிகள் மிகக்குறைவாக இருந்தன. பின்னர் மிசனரி அமைப்புகள், சமூக அமைப்புகள் மற்றும் அரசின் தலையீட்டின் மூலம் தோட்டப்பள்ளிகள் உருவாகி, மலையகக் கல்வி படிப்படியாக வளர்ச்சி பெறத் தொடங்கியது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் இலவசக்கல்வி, தேசியக்கல்விக் கொள்கைகள், தோட்டப்பள்ளிகளின் அரசுடைமையாக்கம், கல்வி உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஆசிரியர் நியமனங்கள் போன்ற பல்வேறு சீர்திருத்தங்கள் மலையகக்கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன. இருப்பினும் புவியியல் தனிமை, பொருளாதாரப் பின்தங்கிய நிலை, ஆசிரியர் பற்றாக்குறை, கல்வி வளங்களின் சமனற்றபகிர்வு மற்றும் சமூகச்சவால்கள் போன்ற காரணிகள் மலையகக் கல்வியின் முழுமையான முன்னேற்றத்திற்கு இன்னமும் தடையாக உள்ளன.

இந்தப் பின்னணியில், "இலங்கை மலையகத்தில் கல்வி – தோற்றமும் வளர்ச்சியும்" என்ற இவ்வாய்வுக் கட்டுரை, மலையகக் கல்வியின் வரலாற்றுப் பரிணாமத்தை கால வரிசைப்படி ஆராய்ந்து, கல்வி வளர்ச்சியை வடிவமைத்த அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கல்வியியல் காரணிகளை பகுப்பாய்வு செய்கிறது. மேலும், தற்போதைய கல்வி நிலையை மதிப்பீடு செய்து, எதிர்கால வளர்ச்சிக்கான வழிமுறைகளையும் முன்வைக்கிறது.

2. ஆய்வின் நோக்கங்கள்

1. இலங்கையின் தேசியக்கல்வி வளர்ச்சியின் வரலாற்றுப் பின்னணியை விளக்குதல்.

2. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் மலையகக் கல்வியின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் ஆராய்தல்.

3. சுதந்திரத்திற்குப் பிந்தைய கல்விக் கொள்கைகள் மலையகக் கல்வியில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்தல்.

4. தோட்டப்பள்ளிகள், மிசனரி அமைப்புகள் மற்றும் அரசின் பங்களிப்பை மதிப்பிடுதல்.

5. 2000-ஆம் ஆண்டிற்குப்பிந்தைய மலையகக் கல்வி வளர்ச்சியின் முன்னேற்றங்களை விளக்குதல்.

6. மலையகக்கல்வி எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை அடையாளம் காணுதல்.

7. எதிர்காலத்தில் மலையகக் கல்வியை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

3. ஆய்வுமுறை (Methodology)

இக்கட்டுரை தரவியல் (Qualitative) ஆய்வு அணுகு முறையை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று மற்றும் விளக்கவியல் ஆய்வாகும். ஆய்விற்குத் தேவையான தகவல்கள் முதன்மையாக ஆவண ஆய்வு (Document Analysis) முறையின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசின் கல்வி அமைச்சு வெளியிட்ட கொள்கை ஆவணங்கள், தேசியகல்வி ஆணைக்குழு அறிக்கைகள், மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்கள வெளியீடுகள், UNESCO, UNICEF மற்றும் World Bank போன்ற சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகள், முனைவர் பட்ட ஆய்வேடுகள், கல்வியியல் நூல்கள் மற்றும் ஆய்விதழ்கள் ஆகியவை ஆய்வின் முக்கிய ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட தரவுகள் காலவரிசை (Chronological Analysis), கருத்தியல் (Thematic Analysis) மற்றும் விளக்கவியல் (Descriptive Analysis) முறைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, காலனித்துவக் கல்வி, சுதந்திரத்திற்குப் பிந்தைய கல்வி வளர்ச்சி, தோட்டப்பள்ளிகளின் பரிணாமம் மற்றும் கல்விக்கொள்கை மாற்றங்கள் ஆகியவை ஒப்பீட்டுநோக்கில் ஆராயப்பட்டுள்ளன.

4. இலங்கையின் தேசியக்கல்வி வரலாறு

(History of National Education in Sri Lanka)

இலங்கையின் கல்வி வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. ஆரம்ப காலத்தில் கல்வி, சமய மையங்களைச் சார்ந்ததாக இருந்தது. பின்னர் காலனித்துவ ஆட்சியாளர்களின் வருகையால் மேற்கத்திய கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னர் தேசியக் கல்விக் கொள்கைகள், இலவசக்கல்வி, மொழிக்கொள்கை, கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் கல்வி விரிவாக்கத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் இலங்கையின் கல்வி அமைப்பு புதிய பரிணாமத்தை அடைந்தது. இருப்பினும், நாட்டின் அனைத்து சமூகங்களுக்கும் கல்வி சமமாகப் பரவவில்லை. குறிப்பாக மலையகப் பகுதிகளில் வாழ்ந்த தோட்டத் தொழிலாளர் மக்களுக்கு கல்வி சென்றடைந்த விதம் தனித்துவமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும். இவ்வரலாற்றுப் பரிணாமத்தைப் புரிந்துகொள்வதன் மூலமே மலையகக் கல்வியின் வளர்ச்சியை முழுமையாக விளக்க முடியும்.

பாரம்பரியக் கல்வி மரபு

காலனித்துவ ஆட்சிக்கு முன்பு இலங்கையில் கல்வி, பெரும்பாலும் மத நிறுவனங்களை மையமாகக் கொண்டிருந்தது. பௌத்தவிகாரைகள், இந்துக் கோயில்கள் மற்றும் பிற சமய மையங்கள் அறிவைப் பரப்பும் முக்கிய கல்வி நிலையங்களாக விளங்கின. இவ்விடங்களில் சமய நூல்கள் மட்டுமல்லாமல் மொழி, இலக்கியம், தத்துவம், மருத்துவம், கணிதம் மற்றும் ஒழுக்கவியல் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டன. தமிழ் மக்கள் வாழ்ந்த வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கோயில் சார்ந்த கல்வி வளர்ச்சி பெற்றிருந்தாலும், பின்னாளில் உருவான மலையகத் தமிழர் சமூகத்திற்கு இவ்வாறான பாரம்பரியக் கல்வி அமைப்புகள் கிடைக்கவில்லை. ஏனெனில் அவர்கள் 19ஆம்நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து குடியேற்றப்பட்ட தொழிலாளர் சமூகமாக இருந்தனர். எனவே, மலையகக் கல்வியின் ஆரம்பம் பாரம்பரிய இலங்கை கல்வி மரபிலிருந்து அல்லாமல், காலனித்துவத் தோட்டப் பொருளாதாரத்துடனேயே இணைந்து வளர்ந்தது.

5. காலனித்துவக் கல்வியின் தோற்றம்

இலங்கையின் நவீனக்கல்வி அமைப்பு காலனித்துவ ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆகிய மூன்று ஐரோப்பிய ஆட்சியாளர்களும் கல்வி வளர்ச்சியில் வெவ்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்தினர். ஆரம்பத்தில் சமயப்பரப்புதலே கல்வியின் முக்கிய நோக்கமாக இருந்தது. பின்னர் நிர்வாகத் தேவைகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நிர்வாகம் ஆகியவற்றின் காரணமாக கல்வி விரிவடைந்தது. இக்காலத்தில் ஏற்பட்ட கல்வி மாற்றங்களே பின்னாளில் தேசியக்கல்வி அமைப்பிற்கான அடித்தளமாக அமைந்தன.

5.1 போர்த்துக்கேயர் காலக் கல்வி (1505–1658)

1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்கள் இலங்கைக்கு வந்ததன் மூலம் மேற்கத்திய கல்வி முறையின் ஆரம்ப கட்டம் உருவானது. இவர்களின் முக்கிய நோக்கம் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதாக இருந்ததால், கல்வியும் சமயப் பரப்பலுடன் இணைக்கப்பட்டது. தேவாலயங்களை மையமாகக் கொண்டு சிறிய பள்ளிகள் நிறுவப்பட்டு, வாசித்தல், எழுதுதல், சமயக் கல்வி மற்றும் அடிப்படை அறிவுத்திறன்கள் கற்பிக்கப்பட்டன. இக்கல்வி முறை பொதுமக்கள் அனைவரையும் சென்றடையவில்லை. பெரும்பாலும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களே இக்கல்வியைப் பெற்றனர். எனவே கல்வி ஒரு பொதுச்சமூக உரிமையாக இல்லாமல், சமய நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இருந்தது. மலையகப் பகுதிகளில் அக்காலத்தில் தேயிலைத் தோட்டங்களோ, மலையகத் தமிழர் குடியேற்றமோ உருவாகவில்லை. ஆகையால் போர்த்துக்கேயர் கல்வியின் தாக்கம் மலையகக் கல்வியில் நேரடியாகக் காணப்படவில்லை. இருப்பினும் மேற்கத்திய கல்வி மரபின் தொடக்க நிலையை உருவாக்கிய வரலாற்றுக் கட்டமாக இக்காலம் முக்கியத்துவம் பெறுகிறது.

5.2 ஒல்லாந்தர் காலக் கல்வி (1658–1796)

1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர்கள் இலங்கையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அவர்கள் போர்த்துக்கேயர்களைப் போலவே கல்வியை சமயப்பரப்பலுக்கான கருவியாகப் பயன்படுத்தினாலும், பள்ளி நிர்வாகத்தில் கூடுதல் ஒழுங்கு முறையை ஏற்படுத்தினர். ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பல தேவாலயப் பள்ளிகள் நிறுவப்பட்டன. ஆசிரியர் நியமனம், பாடத்திட்டம் மற்றும் பள்ளி நிர்வாகம் போன்றவற்றில் ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டது. டச்சுமொழி மற்றும் கிறிஸ்தவ சமயப்பாடங்கள் முக்கியத்துவம் பெற்றன. இதன் மூலம் கல்வி நிர்வாகத்தில் கட்டமைப்பு உருவாகத் தொடங்கியது. இருப்பினும், இக்கல்வி அமைப்பு நகர்ப்புற மற்றும் கடலோரப் பகுதிகளிலேயே அதிகமாகக் காணப்பட்டது. பின்னாளில் உருவான மலையகப் பகுதிகளுக்கு இதன் தாக்கம் மிகக் குறைவாகவே இருந்தது.

5.3 பிரித்தானியர் காலக்கல்வி (1796–1948)

1796 ஆம் ஆண்டு தொடங்கிய பிரித்தானிய ஆட்சி இலங்கையின் கல்வி வரலாற்றில் மிகப் பெரிய திருப்பு முனையாக அமைந்தது. இக்காலத்தில் தான் கல்வி அமைப்பு திட்டமிட்ட நிர்வாகத்தின் கீழ் வளர்ச்சி பெறத்தொடங்கியது. 1833 ஆம் ஆண்டு கோல்புரூக்–கேமரன் (Colebrooke–Cameron) சீர்திருத்தங்களுக்குப் பின்னர் கல்வி நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. அரசு மற்றும் மிசனரி அமைப்புகள் இணைந்து பல பள்ளிகளை நிறுவின. ஆங்கிலக்கல்வி விரிவடைந்தது. பின்னர் 1869 ஆம் ஆண்டு கல்வித் திணைக்களம் நிறுவப்பட்டு, கல்வி நிர்வாகம் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இது இலங்கையின் நவீனக் கல்வி நிர்வாகத்தின் தொடக்கமாகக் கருதப்படுகிறது.

மலையகக் கல்வியில் பிரித்தானிய ஆட்சியின் தாக்கம்

பிரித்தானிய ஆட்சிக் காலத்திலேயே மலையகத் தேயிலைத் தோட்டங்கள் விரிவடைந்தன. இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மலையகப் பகுதிகளுக்கு அழைத்து வரப்பட்டனர். தொடக்கத்தில் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி வழங்கப்படவில்லை. அவர்களின் வாழ்க்கை முழுமையாக உற்பத்தி மற்றும் தொழிலாளர் தேவைகளை மையமாகக் கொண்டிருந்தது.

பின்னர் மிசனரி அமைப்புகள் மற்றும் Coolie Mission போன்ற சமூக அமைப்புகள் தோட்டப் பகுதிகளில் சிறிய பள்ளிகளை நிறுவின. இப்பள்ளிகள் மலையகக் கல்வியின் ஆரம்பக் கட்டமாகக் கருதப்படுகின்றன. பின்னர் 1905 ஆம் ஆண்டின் கல்வி தொடர்பான ஆணைய அறிக்கை, 1907 ஆம் ஆண்டின் Rural Schools Ordinance 1931 மற்றும் 1943 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் ஆகியவை மலையகக்கல்வி வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க அடித்தளத்தை அமைத்தன.

இருப்பினும், தோட்டப்பள்ளிகளில் கல்வித் தரம் மிகவும் குறைவாக இருந்தது. பள்ளிக் கட்டிடங்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பாடநூல்கள் மற்றும் கற்பித்தல் வசதிகள் போதுமான அளவில் இல்லை. கல்வி தொழிலாளர் சமூகத்தின் முழுமையான முன்னேற்றத்தை நோக்கமாகக் கொள்ளாமல், அடிப்படை எழுத்தறிவு வழங்கும் வரம்பிற்குள் மட்டுமே இருந்தது.

5.4 *காலனித்துவக் கல்வியின் தாக்கம் – ஒரு மதிப்பீடு*

காலனித்துவ ஆட்சிக்காலம் இலங்கையில் மேற்கத்திய கல்வி அமைப்பை அறிமுகப் படுத்தியிருந்தாலும், கல்வி வளர்ச்சி சமூகங்களுக்கு இடையே சமமாகப் பகிரப்படவில்லை. நகர்ப்புற மற்றும் பொருளாதாரரீதியாக முன்னேறிய சமூகங்கள் கல்விவாய்ப்புகளை அதிகமாகப் பெற்றன் அதே சமயம் மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்கு கல்வி மிகவும் தாமதமாகச் சென்றடைந்தது.

எனினும், மிசனரி பள்ளிகள், கல்வித் திணைக்களம், கல்விச் சட்டங்கள் மற்றும் பள்ளி விரிவாக்க முயற்சிகள் ஆகியவை பின்னாளில் மலையகக்கல்வி வளர்ச்சிக்கான அடித்தளத்தை உருவாக்கின. சுதந்திரத்திற்குப் பிந்தைய இலவசக்கல்வி மற்றும் தேசியக்கல்விக் கொள்கைகள் இவ்வடித்தளத்தின் மீது கட்டமைக்கப்பட்டன. எனவே, காலனித்துவக் கல்வியை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதோடு, அதன் நீண்ட கால தாக்கங்களையும் புரிந்துகொள்வது மலையகக்கல்வி வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு இன்றியமையாததாகும்.

6. *சுதந்திரத்திற்குப் பிந்தைய கல்வி வளர்ச்சி*

(Educational Development after Independence)

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து, நாட்டின் கல்வி அமைப்பில் புதிய மாற்றங்கள் உருவாகத் தொடங்கின. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் நிலவிய கல்வி ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, கல்வியை அனைத்து மக்களுக்கும் சமமாக வழங்கும் நோக்கில் பல்வேறு கல்விக் கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. குறிப்பாக இலவசக்கல்வி, அரசுப் பள்ளிகளின் விரிவாக்கம், ஆசிரியர் பயிற்சி, பாடத்திட்டச் சீர்திருத்தம் மற்றும் கல்வி நிர்வாக மேம்பாடு போன்ற நடவடிக்கைகள் கல்வி வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமாக அமைந்தன.

இருப்பினும், மலையகத் தோட்டத்தொழிலாளர் சமூகத்தின் கல்வி வளர்ச்சி நாட்டின் பொதுக்கல்வி வளர்ச்சியுடன் சமமான வேகத்தில் முன்னேறவில்லை. சமூக, பொருளாதார மற்றும் புவியியல் காரணங்களால் மலையகப் பகுதிகளில் கல்வி வளர்ச்சி மந்தமான முன்னேற்றத்தையே கண்டது. இந்தக் கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசின் கல்விக் கொள்கைகள் மற்றும் நிர்வாக மாற்றங்கள் பின்னாளில் மலையகக் கல்வி முன்னேற்றத்திற்கு முக்கியமான அடிப்படையாக அமைந்தன.

6.1 இலவசக் கல்விக் கொள்கையின் தாக்கம்

இலங்கையின் கல்வி வரலாற்றில் மிகப்பெரிய திருப்பு முனையாக **1945** ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்விக்கொள்கை கருதப்படுகிறது. இக்கொள்கை சுதந்திரத்திற்குப் பின்னரும் விரிவுபடுத்தப்பட்டு, அனைத்து குழந்தைகளுக்கும் கல்விபெறும் உரிமையை உறுதிப்படுத்தும் அடிப்படைச் சீர்திருத்தமாக அமைந்தது. இலவசக் கல்வியின் மூலம், கட்டணமின்றி கல்வி பெறும் வாய்ப்பு உருவானது. ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களின் பள்ளிச் சேர்க்கை அதிகரித்தது. பெண்களின் கல்விப் பங்கேற்பு படிப்படியாக உயர்ந்தது. அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. பாடநூல்கள் மற்றும் கல்வி உதவிகள் விரிவுபடுத்தப்பட்டன. மலையகப் பகுதிகளிலும் இலவசக்கல்வியின் பயன் கிடைத்திருந்தாலும், தோட்டப்பள்ளிகளின் ஆதிக்கம், போக்குவரத்து வசதியின்மை, பள்ளிகளின் தொலைவு மற்றும் பொருளாதாரக் காரணங்களால் அதன் முழுப்பயனும் உடனடியாக சென்றடையவில்லை.

6.2 கல்விச் சீர்திருத்தங்கள்

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் பல கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. இச்சீர்திருத்தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்துவதோடு, கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கத்தையும் கொண்டிருந்தன.

முக்கிய மாற்றங்கள்:

- தேசியக் கல்விக்கொள்கை உருவாக்கம்.
- தாய்மொழி வழிக்கல்வி விரிவாக்கம்.
- ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் நிறுவல்.
- தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வி வாய்ப்புகள் அதிகரித்தல்.
- பாடத்திட்ட மறுசீரமைப்பு.
- கல்வி நிர்வாகத்தின் மாகாணமயமாக்கல்.

இந்த மாற்றங்கள் நாட்டின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தின. இருப்பினும், மலையகப்பகுதிகளில் இம்மாற்றங்கள் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுவதற்கு கூடுதல் காலம் தேவைப்பட்டது.

6.3 தோட்டப் பள்ளிகளின் வளர்ச்சி

மலையகக்கல்வியின் ஆரம்ப வளர்ச்சி தோட்டப்பள்ளிகளை மையமாகக் கொண்டே நடைபெற்றது. தொடக்கத்தில் இப்பள்ளிகள் பெரும்பாலும் தோட்ட நிர்வாகம் மற்றும் மிசனரி அமைப்புகளால் நடத்தப்பட்டன. பள்ளிக்கட்டிடங்கள், ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் வளங்கள் மிகவும் குறைவாக இருந்தன. சுதந்திரத்திற்குப் பின்னர் தோட்டப்பள்ளிகளின் நிர்வாகம் படிப்படியாக அரசின் கண்காணிப்பிற்குள் கொண்டு வரப்பட்டது. புதிய பள்ளிக் கட்டிடங்கள் உருவாக்கப்பட்டு, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். மாணவர் சேர்க்கை அதிகரிக்கப்பட்டு பெண்களின் பள்ளிச் சேர்க்கையில் முன்னேற்றம் கண்டது. இத்தகைய நடவடிக்கைகள் மலையகக்கல்வியின் அடித்தளத்தை வலுப்படுத்தின.

6.4 தோட்டப் பள்ளிகளின் அரசுடைமையாக்கம்

மலையகக்கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்திய முக்கிய நிகழ்வாக தோட்டப்பள்ளிகளின் அரசுடைமையாக்கம் அமைந்தது. பல ஆண்டுகளாக தனியார் தோட்டநிர்வாகத்தின் கீழ் செயல்பட்ட பள்ளிகள் அரசின் கல்வி அமைப்புடன் இணைக்கப்பட்டன. இதன்மூலம் அரசின் நிதி உதவி

அதிகரித்ததோடு ஆசிரியர்களின் பணி நியமனம் அதிகரித்தது. பாடநூல்கள் மற்றும் கற்றல் வளங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, கல்வித்தரம் மேம்படுத்தப்பட்டது. தேசியக் கல்விக்கொள்கைகள் தோட்டப் பள்ளிகளிலும் நடைமுறைப் படுத்தப்பட்டன. இந்த மாற்றம் மலையக மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது.

6.5 பெண்களின் கல்வி வளர்ச்சி

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் மலையகப் பெண்களின் கல்வி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டது. ஆரம்பத்தில் தொடக்கக்கல்வியில் மட்டுமே அதிகமாகப் பங்கேற்ற பெண்கள் பின்னர் இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி மற்றும் உயர்கல்வியிலும் பங்கேற்கத் தொடங்கினர். இலவசக்கல்வ, பெண்கள் கல்வி தொடர்பான விழிப்புணர்வு, அரசின் கல்வி உதவித்திட்டங்கள், சமூக அமைப்புகளின் பங்களிப்பு, ஆசிரியர் நியமன விரிவாக்கம் போன்றவை பெண்கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றின. இருப்பினும், வறுமை, போக்குவரத்து சிரமம், பள்ளிகளின் தொலைவு மற்றும் குடும்பப் பொறுப்புகள் போன்ற காரணிகளால் பல பெண் பிள்ளைகள் இன்னும் கல்வித் தடைகளை எதிர்கொள்கின்றனர்.

6.6 2000-ஆம் ஆண்டிற்குப் பிந்தைய மலையகக்கல்வி வளர்ச்சி

2000-ஆம் ஆண்டிற்குப் பின்னர் மலையகக்கல்வியில் பல்வேறு முன்னேற்றங்கள் காணப்பட்டன. தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் ஒத்துழைப்புடன் கல்வி உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் தான் புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டு தகவல் தொழில்நுட்ப வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கணினிக்கல்வி விரிவுபடுத்தப்பட்டதோடு, அறிவியல் ஆய்வகங்கள் மேம்படுத்தப்பட்டன. நூலக வசதிகள் அதிகரிக்கப்பட்டன. பள்ளி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மாணவர் உதவித்தொகை திட்டங்கள் விரிவாக்கப்பட்டன. ஆசிரியர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்த மாற்றங்கள் மலையக மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கின.

6.7 தற்போதைய கல்வி முன்னேற்றம் – ஒரு மதிப்பீடு

அண்மைக் காலங்களில் மலையகக்கல்வியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பள்ளிச்சேர்க்கை விகிதம் உயர்ந்துள்ளது. பெண்களின் கல்விப் பங்கேற்பு அதிகரித்துள்ளது; தேசியத் தேர்வுகளில் மாணவர்களின் சாதனைகள் முன்னேற்றம் கண்டுள்ளன. அதேவேளையில் உயர்கல்வி, தொழிற்கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பக் கல்வியிலும் மாணவர்களின் பங்கேற்பு அதிகரித்து வருகிறது. இருப்பினும், கல்வித்தரத்தில் பிராந்திய வேறுபாடுகள், ஆசிரியர் பற்றாக்குறை, தகவல்தொழில் நுட்ப அணுகல் குறைவு, பொருளாதாரப்பின் தங்கிய நிலை, உயர் கல்வி வாய்ப்புகளின் சமமற்ற பகிர்வு போன்ற சவால்கள் இன்னும் முழுமையாக நீங்கவில்லை.

எனவே, மலையகக்கல்வியின் எதிர்காலவளர்ச்சிக்காக கல்வி உள்கட்டமைப்பு மேம்பாடு, ஆசிரியர் திறன் மேம்பாடு, டிஜிட்டல்கல்வி விரிவாக்கம், சமூக விழிப்புணர்வு மற்றும் பெண்களின் கல்விக்கான சிறப்பு ஆதரவுதிட்டங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது அவசியமாகும். இவ்வாறு செயல்பட்டால் மட்டுமே மலையகக்கல்வி தேசியக்கல்வி வளர்ச்சியுடன் முழுமையாக இணைந்து நிலையான முன்னேற்றத்தை அடைய முடியும்.

7. கல்வி வளர்ச்சிக்கான பரிந்துரைகள்

மலையகக் கல்வியை நிலையான முறையில் மேம்படுத்துவதற்கு பின்வரும் பரிந்துரைகள் முன் வைக்கப்படுகின்றன.

1. கல்வி உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்

அனைத்து பள்ளிகளிலும் பழமையான கட்டிடங்கள் அகற்றிவிட்டு புதிய தரமான வகுப்பறைகள் ஏற்படுத்த வேண்டும். மேலும் நவீன ஆய்வகங்கள், நூலகங்கள், கணினி மையங்கள், இணையவசதிகள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு கழிவறை வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

2. ஆசிரியர் மேம்பாட்டு திட்டங்கள்

தொலைதூரப் பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகைகள், குடியிருப்பு வசதிகள் வழங்கப்படவேண்டும். தொடர்ச்சியான தொழில்முறைப் பயிற்சிகளும் கட்டாயமாக்கப்படவேண்டும்.

3. டிஜிட்டல் கல்வி விரிவாக்கம்

மலையகப்பகுதி மாணவர்களுக்கு சமமான டிஜிட்டல் கல்விவாய்ப்புகளை உருவாக்க அரசும் தனியார் நிறுவனங்களும் இணைந்து செயல்படவேண்டும்.

4. பெண்களின் கல்விக்கு சிறப்பு ஆதரவு

பெண் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைகள், பாதுகாப்பான போக்குவரத்து வசதி, பெண் ஆசிரியர்கள் நியமனம், விடுதி வசதிகள் மற்றும் தொழில் வழிகாட்டல் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

5. சமூகப்பங்கேற்பு

பெற்றோர், முன்னாள் மாணவர்கள், சமூக அமைப்புகள் மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் பள்ளி மேம்பாட்டில் அதிக பங்கேற்பு வழங்கவேண்டும்.

6. தொழிற்கல்வி மற்றும் திறன்மேம்பாடு

பள்ளிக் கல்வியுடன் தொழிற்கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவோர் பயிற்சிகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

7. கல்வி சமத்துவம்

மலையகப் பகுதிகளுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இடையிலான கல்வி இடைவெளியை குறைக்கும் வகையில் வளங்கள் சமமாகப் பகிரப்பட வேண்டும்.

8. முடிவுரை (Conclusion)

இலங்கை மலையகத்தில் கல்வி வளர்ச்சி என்பது பல்வேறு வரலாற்று, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களின் விளைவாக உருவான நீண்ட காலப் பரிணாமமாகும். காலனித்துவ ஆட்சிக்காலத்தில் மிகவும் வரையறுக்கப்பட்ட நிலையில் இருந்த கல்வி, சுதந்திரத்திற்குப் பிந்தைய இலவசக் கல்விக் கொள்கை, கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. குறிப்பாக தோட்டப்பள்ளிகளின் மேம்பாடு, ஆசிரியர் நியமனம், கல்வி உள்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் பெண்களின் கல்விப்பங்கேற்பு ஆகியவை மலையகக் கல்வியின் வளர்ச்சியில் முக்கிய மைல்கற்களாக அமைந்துள்ளன.

இருப்பினும், புவியியல் தனிமை, பொருளாதாரப் பின்தங்கிய நிலை, தகவல் தொழில்நுட்ப அணுகல் குறைவு, உயர்கல்வி வாய்ப்புகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் கல்வித்தர வேறுபாடுகள் போன்ற சவால்கள் இன்னும் நீடிக்கின்றன. இச்சவால்களை சமாளிக்க அரசு, கல்வி நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் செயல்படுவது அவசியமாகும்.

மலையகக்கல்வி என்பது கல்வி வரலாற்றின் ஒரு பகுதியாக மட்டுமல்ல. அது சமூகநீதி, சமத்துவம் மற்றும் நிலையான வளர்ச்சியின் அடையாளமாகவும் விளங்குகிறது. எனவே, கல்விக்கொள்கைகள மலையக மக்களின் சமூக

மற்றும் பொருளாதார யதார்த்தங்களை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட வேண்டும். தரமான, சமமான மற்றும் உள்ளடக்கிய கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதன் மூலம் மட்டுமே மலையக மாணவர்களின் முழுமையான மனிதவள மேம்பாட்டை அடைய முடியும். இத்தகைய அணுகுமுறை, இலங்கையின் ஒட்டு மொத்த கல்வி முன்னேற்றத்திற்கும் நிலையான தேசிய வளர்ச்சிக்கும் உறுதியான அடித்தளமாக அமையும்.

துணை நூற்பட்டியல் (References)

[1]. அரசரத்தினம், சு. (2008). இலங்கைத் தமிழர் வரலாறு. சென்னை: குமரன் புத்தக இல்லம்.

[2]. கந்தையா, நா. (2015). இலங்கை மலையகத் தமிழர் சமூக வரலாறு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[3]. குணசேகரம்,க. (2018). இலங்கையின் கல்வி வளர்ச்சியும் சமூக மாற்றங்களும். கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

[4]. சிவசுப்பிரமணியம்,க. (2016). மலையகத் தமிழர்களின் கல்வி வளர்ச்சி. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

[5]. சோமசுந்தரம், த. (2010). மலையகத் தமிழர் சமூகமும் கல்வி வளர்ச்சியும். கொழும்பு: சமூக ஆய்வு நிறுவனம்.

[6]. தொண்டமான், சௌமிய மூர்த்தி. (1994). மலையகத் தமிழர் வரலாறு. கொழும்பு: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்.

[7]. நடராசா, எஸ். (2017). இலங்கையின் கல்வி அமைப்பு: வரலாறும் வளர்ச்சியும். கொழும்பு: கல்வி அமைச்சு வெளியீடு.

[8]. பாலசுந்தரம், சு. (2005). இலங்கை இந்தியத் தமிழர் வரலாறு. சென்னை: குமரன் புத்தக இல்லம்.

[9]. முத்துக்குமாரசாமி, நா. (2019). இலங்கை மலையக மக்களின் சமூகப்பரிணாமம். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

[10]. இலங்கை கல்வி அமைச்சு. (2013). கல்வித்துறை மேம்பாட்டுத் திட்டம் (2013–2017). கொழும்பு: கல்வி அமைச்சு.

[11]. இலங்கை கல்வி அமைச்சு. (2022). பாடசாலை கணக்கெடுப்பு அறிக்கை – 2021. கொழும்பு: கல்வி அமைச்சு.

[12]. உலக வங்கி. (2011). இலங்கையின் பாடசாலைக் கல்வி மாற்றம்: சவால்களும் முன்னேற்றங்களும். உலக வங்கி.

[13]. பெரேரா,ஹெச்.என். (2014). இலங்கையில் கல்வியும் சமூக முன்னேற்றமும். International Journal of Educational Development, 38 1–9.